தேவாரம்பெற்ற தலங்களும் சிலாசாஸனவழக்கும்

தமிழ்லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப்பண்டிதர்
மு. இராகவையங்கார்.

சிலாசாஸனங்கள் மூலம் அறியப்படும் செய்திகளுள்ளே தேவாலயங்களைப்பற்றிய அறச்செயல்களே அதிகம் என்பது பலரும் அறிவர். அவ்வாலயங்கட்கு நிலையான திருப்பணிகள் பல புரிந்தும், அறப்புறமாக இறையிலிநிலங்களை யளித்தும், வாகனங்கள் அணிகல முதலியன வழங்கியும் பக்தித்திறம் வாய்ந்த உத்தமசீலர்கள் செய்துபோந்த தருமச்செயல்கள் பலவும், கோயிற்றிருமதில் முதலிய பொதுவிடங்களிலே பலரும் அறியவும் அறிந்துபேணவும் சாஸனமுறையில் வரையப்பட்டுள்ளன. அத்தகைய கல்லெழுத்துக்களினின்று தெரியவரும் பழைய வரலாறுகள் எண்ணிறந்தனவாம். அவற்றுள் தேவாரம்பெற்ற தலங்களைப்பற்றி அறியப்படும் புதியசெய்திகளும் பல. அவை சைவநன்மக்களும் பிற அறிஞர்களும் அறிதற்கும் ஆராய்ந்துகொள்ளுதற்கும் உரியனவாதலின், அவற்றை இங்குத் தொகுத்துக்காட்ட விரும்புகின்றேன். ஆராய்ச்சிக்குரிய அத் தலங்களை மூவகையாகக் கொண்டு இங்கு நோக்கத் தகும். அவையாவன:—

1. இப்போது வழங்கும் பதிகம்பெற்ற தலங்கள்.
2. இப்போது வழக்குவீழ்ந்த பதிகமுள்ள தலங்கள்.
3. வைப்புத் தலங்களுள் இடம்விளங்குவன.

I. வழங்கும் பதிகம்பெற்ற தலங்கள்

1. திருச்சிற்றேமம்

இப்பெயர்கொண்ட திருப்பதி, சம்பந்தமூர்த்திகளது திருப்பதிகம் பெற்றுள்ளதென்பது தேவாரத்தால் அறியப்படும். சோணாட்டுத் திருத்துறைப்பூண்டித் தாலுகாவில், திருவாய்மூர் என்ற சிவக்ஷேத்திரத்தை யடுத்து அதன் தென்மேற்கில் உள்ள

சித்தாம்பூர் என்ற தலமாக இப்போது இது கருதப்படுகின்றது. ஆனால், இவ்வூர்க் கோயிலிலுள்ள சாஸனங்கள், இதனைத் திருச்சிற்றேமம் என்ற பெயராற் குறியாது, திருச்சிற்றுய்மூர் என்றே வழங்குகின்றன என்பர். இதனால் தேவாரப்பதிகம் பெற்ற திருச்சிற்றேமம் என்பது வேறோர் தலமாகவேண்டும் என்பது தெரியலாம். இஃது இவ்வாருக,

தஞ்சை ஜில்லாப் பட்டுக்கோட்டைத் தாலுகாவில், அறந்தாங்கி செல்லும் ரயில்பாதையில், திருச்சிற்றம்பலம என இப்பொழுது வழங்கும் ஊர் பழைய சிவாலயமுடையதாம். இவ்வாலயம் மிகப் பழைமையானதென்பது பாண்டியன் வரகுணன், முதல் ஆதித்தசோழன் முதலியோர்காலத்துச சாஸனங்கள்[1] ஆங்குள்ளவற்றால் தெரியவருகின்றது அச்சாஸனங்கள் யாவும் அவ்வூரைத் திருச்சிற்றேமம் என்றே வழங்குவனவாகும். ஆகவே, சர்பந்தமூர்த்திகளது திருப்பதிகத்துச்குரிய திருசசிற்றேமம் இத்திருச்சிற்றம்பலமே என்று சாஸனவாராய்ச்சியாளர் கருதுவது பொருத்தமாகின்றது.

2. திருவிசயமங்கை

இப்பெயர் கொண்ட தலமும் சம்பந்தமூர்த்திகளது திருப்பதிகம் பெற்றதாம். இது, கும்பகோணத்துக்குப பககத்தே சுந்தரப்பெருமாள்கோயில் ரயில்வே ஸ்டேஷனுக்கு 4 மைலிலுள்ள தவதலமாக இக்காலத்தாராற் கருதபபடுகின்றது. ஆனால், சம்பந்தசுவாமிகள் பதிகத்தில்—

"கொளளி டக்கரைக கோவந்த புத்தூரில்
வெள்விடைககருள செய்விசயமங்கை
யுள்ளிடததுறை கின்றவுருத்திரன்" (திருவிசயமஙகைபபதி. 3)

என வருதலால், இததலம் கொள்ளிடக்கரையில் உள்ள கோவந்த புத்தூரே என்பது தெரியலாம் கோவந்தபுத்தூரில் 'வெள்விடைக்கு அருள்செய் விசயமங்கை' என்பதனால் விசயமங்கை என்பது அவ்வூர்ச் சிவாலயத்தின்பெயர் என்பதும், அதனுட் கோயில் கொண்ட சிவபிரான் கோவொன்றினுக்கு அருள்புரிந்தமை பற்றி அவ்வாலயமுள்ள ஊர் கோவந்தபுத்தூர் என்ற பெயர் பெறலாயிற்று என்பதும் விளங்கும். இஃது இப்போது கோவிந்தபுத்தூர் என வழங்குவது. இதன்கண் புராதனமான சிவாலயமொன்று உண்டு. இப்போது கருதப்படுமாறு, இவ்வூர்க்கு 4 மைலில் உள்ள கிராமத்தமைந்த சிவாலயமே பாடல்பெற்ற தலமாகக் கொள்வதற்கு, கொள்ளிடக்கரையில் அஃதில்லாமலும் கோவந்தபுத்தூரின்

1. M. E. R. 1925 - 6, p. 98.

தொடர்புபெறுமஹூம் இருப்பது பெருந்தடையாகின்றது. அத ஞல் கோவந்தபுத்தூரில் உள்ள சிவாலயமே சம்பந்தமூர்த்திகள் திருப்பதிகத்துக்கு உரியதென்பது பொருத்தமாம். இதற்கேற்ப, அப்புத்தூர்ச் சிவாலயத்துள்ள பழைய சோழர்சாஸனங்களெல் லாம், ஆங்குக் கோயில்கொண்ட சிவபிரானை "ஸ்ரீ விசையமங்கை யுடையார்" "ஸ்ரீ விஜயமங்கலத்து மஹாதேவர்" என வழங்கி யிருத்தல், மேற்கூறிய முடிபை உறுதிப்படுத்துவதாம் என்பர் சாஸனவாராய்ச்சியாளர்.[1]

3. திருக்கடைமுடி

இப்பெயர்பெற்ற சிவதலம் ஞானசம்பந்த சுவாமிகளது திருப்பதிகம் உடையதாகும். இதனைத் தஞ்சாவூர்ஜில்லா ஆனந் தத்தாண்டவபுரம் ரயில்ஸ்டேஷனுக்குக் கிழக்கே 5 மைலில் உள்ள கீழையூர் என்ற தலமாகக்கொண்டு இக்காலத்தார் வழிபடுவர். ஆயின் முன்னைவழக்கு இதற்கு முற்றும் மாறுனதாம். தஞ்சாவூர் ஜில்லா, கோவிலடி எனவழங்கும் பேரூர்க்குக் கீழ்பால் 1½ மைலில் திருச்சென்னம்பூண்டி என்றுள்ள கிராமம் பழைமையான சிவாலய முடையது. அதனில் திருக்கோயில் கொண்ட சிவபிரான் சடை யர், ஜடேசுவரர் என்ற திருநாமங்களால் இக்காலத்து வழங்கப்படு வதோடு, ஸ்வயம்புமூர்த்தி என்றும் விசேடமாக வழிபடப்பெறு வர். இவ்வூர்க் கோயிற் றிருமதில்களிற் பொறிக்கப்பட்ட சாஸ னங்கள் பலவாகும். அவற்றுள் 9, 10-ம் நூற்றுண்டுகளில் விளங் கிய பல்லவசோழர்கள் சாஸனங்களும் உள்ளன.[2] அவையாவும், இச்சிவாலயமுள்ள ஊரைத் திருக்கடைமுடி என்றும், இதனுள் எழுந்தருளியுள்ள மூர்த்தியைப் பெரும்பான்மை திருக்கடைமுடி மஹாதேவர் எனவும் சிறுபான்மை திருச்சடைமுடி மஹாதேவர் எனவும் வழங்குகின்றன. ஆனல், நந்திக்கலம்பகங் கொண்டவனும் தெள்ளாறெறிந்து வென்றவனுமான மூன்றும் நந்திவன்மன், அவன் மகன் கோ விஜயநிருபதுங்கன் என்ற பல்லவர்கள் காலத்தவான பழஞ்சாஸனங்களிலே திருக்கடைமுடி மஹாதேவர் என்றே காணப் படுவதால், ககரசகரங்கட்கு வேற்றுமைதெரியாமல் எழுதநேர்ந்த பிற்காலத்தேதான், கடைமுடியைச் சடைமுடி என்று பின்னேர் கொண்டு வழங்கலாயினர் என்று தோற்றுகின்றது. 10-ம் நூற் ருண்டினனை முதற்பராந்தகசோழன் காலத்துச் சாஸனங்கள் இவ்விருவகையையும் ஆளுகின்றன. அதனுல் அக்காலத்தேயே இம்மாறுபாடு உண்டாகியது என்று சொல்லலாம். ஆனல், இது தவருன வழக்கென்பது இத் திருக்கடைமுடிப் பக்கத்துத் திருச்

---

1. M. E. R. Nos. 157 — 184 of 1926 - 27.
2. S. I.I. Vol. vii, Nos. 507 - 527.

சடைமுடி என வேறு தலமொன்று உள்ளமை சாஸனங்களால் தெளிவாக விளங்குவதாற் பெறப்படுகின்றது. அதனை அடுத்து விளக்குவேன். சம்பந்தமூர்த்திகள் திருமழபாடியை வணங்கியபின்

"அதன்மருங்கு கடந்தருளால் திருக்கானூர்
பணிந்தேத்தி யான்ற சைவ
முதன்மறையோர் அன்பிலாலந்துறையின்
முன்னவனைத் தொழுது போற்றிப்
பதநிறைசெந் தமிழ்பாடிச் சடைமுடியார்
பயில்பதியும் பணிந்து பாடி
மதகரட வரையுரித்தார் வடகரைமாந்
துறையணைந்தார் மணிநூல் மார்பர்" (பெரியபு. திருஞான. 308)

எனப் பாடுவர் சேக்கிழார். இப்பாட்டினின்றும், கொள்ளிடங் காவிரிகட்கு இடைப்பட்ட இடையாற்றுநாட்டில் திருக்கானூர், அன்பிலாலந்துறை, சடைமுடி என்ற மூன்றும் அடுத்தடுத்துள்ள தலங்கள் என்பதும், அவை சம்பந்தமூர்த்திகளது திருப்பதிகங்கள் பெற்றவை என்பதும் விளக்கமாகும். 'சடைமுடிகானூர்' எனவரும் அடைவுதிருத்தாண்டகத் தொடரும் காண்க. இம்மூன்றனுள், முன்னவை யிரண்டிற்கும் அம்மூர்த்திகள் பாடிய பதிகங்கள் இப்போதும் வழங்குவன. பின்னதான 'சடைமுடியார் பயில்பதி' என்பது, திருக்கடைமுடி என்றே கொள்ளற்பாலது; என்னை? சம்பந்தர் திருப்பதிகம் அக்கடைமுடிக்கே காணப்படுவதால் என்க. எனவே, 'கடைமுடியார்' எனற்பாலது 'சடைமுடியார்' எனச் சேக்கிழார்காலத்தோ அவர்க்குப்பின்னரோ வழங்கலாயிற்று என்பது தெரியலாம். திருச்சென்னம்பூண்டியாகிய கடைமுடிச் சிவபிரானைச் சடையார், ஜடேச்வரர் என இக்காலத்தவரும் வழங்குவர்.

இனி, மாயூரந் தாலுகாவில் திருவிளநகர்க்குக் கீழ்பால் உள்ள கீழையூரை, திருக்கடைமுடி என்று கொள்வதற்குப் பிற்காலவழக்குத்தவிர வேறு சாஸனப்பிரமாணமேனும் பழைய நூற்பிரமாணமேனும் ஒன்றுமே இல்லை. திருக்கடைமுடிப் பதிகத்து இறுதிதோறும் 'வளநகர் கடைமுடியே' எனவருந் தொடர்க்கு, 'விளநகரையடுத்த கடைமுடி' என்று சிறிது பாடமாற்றிப் பொருள்கொண்டு, பின்னோர் இக் கீழையூரைத் திருக்கடைமுடி என்று வழங்க நேர்ந்ததுபோலும்.[1] இஃது எங்ஙனமாயினும், பழைய பல்லவர்காலமுதல் பிற்பட்ட சோழர்கள்காலம்வரை, தஞ்சாவூர்த் தாலுகாத் திருச்சென்னம்பூண்டியே திருக்கடைமுடி

1. சைவ நண்பரொருவரை இதுபற்றி நான் உசாவநேர்ந்தபோது, இக் கருத்தேபட அவர் கூறலாயினர்.

என்று கொள்ளப்பெற்று வந்த செய்தி சாஸனங்களால் நன்கறியப் படுதலின், தேவாரம்பெற்ற தலமாகக் கீழையூரை முன்னோர் கருதினரில்லை என்பது தெளிவு.

II வழக்குவீழ்ந்த பதிகமுள்ள தலங்கள்

4. திருச்சடைமுடி

திருநாவுக்கரசு நாயனார் தம் அடைவு திருத்தாண்டகத்தில்

"சடைமுடி சாலைக்குடி தக்களூர் . . . .
சடைமுடி கானூர் கடம்பந்துறை"

என்று பாடியவிடத்து, முற்கூறிய கடைமுடியின் வேறாகச் சடைமுடி என்ற தலமொன்றுங் கூறுதல் காணலாம். இப்பெயர் கொண்ட திருப்பதி, தஞ்சைஜில்லா கோவிலடி என்ற ஊரிலுள்ள சிவாலயப் பிரதேசத்துக்குப் பண்டு வழங்கிவந்ததாகும். இதனை—

"சகாப்தம் 1497... விட்டலதேவ மஹாராயர்...பாண்டி குலாசனி வள நாட்டு வல்லநாட்டு மேலைமுறி திருச்சடைமுடி என்ற கிராமம் திருப்பேர் நகரான்பெருமாளுக்கு ஸமர்ப்பித்த தர்மசாஸனம்"[1] எனவும்

"திரிபுவன சக்ரவர்த்திகள் விக்கிரமசோழதேவர்க்கு யாண்டு 11-வது பாண்டிகுலாசனிவளநாட்டு எயில்நாட்டுப் பிரமதேயம் திருப்பேர்ப்பெருங் குறி மஹாசபையோம் இவ்வூர் வடபிடாகை திருச்சடைமுடிந் திருச்சடை முடியுடைய மஹாதேவர்கோயிலில் திருமண்டபத்தே கூட்டங் குறை வறக்கூடியிருந்து"[2]

எனவும் வரும் சாஸனப் பகுதிகளால் அறியலாகும். இவற்றால் அப்பர்ஸ்வாமிகள் அடைவுதிருத்தாண்டகத்திற் பாடிய சடைமுடி என்ற தலம், கோவிலடி எனவழங்கும் பேரூரின் பகுதியே என்பது விளக்கமாம். இக்கோவிலடி பண்டைக்காலத்தில் திருப்பேர்நகர் என்று பிரபலம்பெற்ற நகரமும் ஆழ்வார்கள் பலருடைய பாடல்கள்பெற்ற விஷ்ணுஸ்தலமும்[3] ஆகும். இந்நகரின் வடபுறத்தே, திருச்சடைமுடி என்ற வழங்கிய சிவாலயபகுதி, திருப்பேளர்ப் புறம் என்று சங்கநூல்களிலும்[4] திருப்பேர்த்திருப்புறம் என்று சாஸனங்களிலும் வழங்குவது. சோழன் கோச்செங்கணானுக்கும் சேரமான் கணைக்காலிரும்பொறைக்கும் போர்நிகழ்ந்த களமாக

1. S. I. I. vii, pp. 303—4. 2. Ibid. p. 307.

3. 'அப்பக்குடத்தான்' என்பது வைஷ்ணவ வழக்கு.

4. 'திருப்போர்ப்புறம்' என்று இப்போதுள்ள களவழிப் பதிப்பிற் காணப்படினும், அதன் பிரதிகளில் திருப்பேளர்ப்புறம் என்றும் காணப்படும் பாடமே ஏற்புடையதாம். "சேரர்வஞ்சியும் சிலாசாஸன வழக்கும்" என்ற என்கட்டுரையின் முற்பகுதி காண்க. (Journal of the Institute of Oriental Research, Vol. I.)

முன்னூல்கள் கூறும் திருப்பேர்ப்புறம் என்பது, இத்திருச்சடைமுடிப் பிரதேசமென்றே தெரிகின்றது. இச்சடைமுடிச் சிவபிரானை

"திருப்பேர்த் திருப்புறத்துறை மஹாதேவர்" (p. 308)

"உடையார் திருப்புறத்துறைவார்" (p. 311)

"திருப்புறத்துறையும் பெருமானடிகள்" (p. 309) (S. I. I. vii)

என்று பழையசாஸனங்கள் குறிக்கின்றன. இவற்றால், திருப்புறம் என்றும் இச்சிவாலயம் பண்டு வழங்கப்பெற்றுவந்தமை தெரியலாம். இவ்வாலயம், திருமால்கோயிற்குக் கிழக்கே 3 பர்லாங்கில் உள்ளது. திருச்சடைமுடிக்குக் கீழ்பால் 1½ மைலில் உள்ளதே மேற்கூறிய திருக்கடைமுடி. திருப்பேரிலுள்ள திருமால்தலத்தின் பிராபல்யத்தால் திருச்சடைமுடி என்ற ஊர்ப்பெயரின் வழக்குக் குன்றியகாலத்தே, கடைமுடி சடைமுடிகளின் வேறுபாடு மறக்கப்படலாயிற்றென்றும், அதனால் திருக்கடைமுடிச் சிவபிரானைச் சடைமுடிநாதர், சடையார், ஜடேசுவரர் என்று மாற்றிப் பிற்காலத்தார் வழங்கநேர்ந்ததோ என்றும் கருத இடமுண்டு. எங்ஙனமாயினும், திருக்கடைமுடியும் திருச்சடைமுடியும் ஒன்றையொன்றாக மயங்கும்படி எழுத்தொற்றுமையாலும் இடவண்மையாலும் நெருங்கியிருந்த தலங்களே என்பதில் ஐயமில்லை. இவ்வாறன்றி, 'சடைமுடியார் பயில்பதி' என்று சேக்கிழார் கூறியது, இத்திருச்சடைமுடியே என்று கூறினும் பொருந்தும். இங்ஙனமாயின் இதற்குப் பழையபதிகம் இருந்து பின் வீழ்ந்ததெனல் வேண்டும்.

5. திருத்தவத்துறை

இத்தலம், திருச்சிராப்பள்ளி ஜில்லாவில், லால்குடி என்று இப்போது வழங்கும் ஊர் என்பதும், திருநாவுக்கரசு நாயனார் தம் அடைவு திருத்தாண்டகத்தில் இதனைக் குறிப்பிட்டிருப்பதும், சம்பந்தமூர்த்திகள் இத்தலத்துக்கு எழுந்தருளிப் பதிகம்பாடினரென்று சேக்கிழார் கூறியதனை இவ்வூர்ச் சிவாலயத்திற் கண்ட பழைய சாஸனங்கள் ஆதரித்தலும் பிறவுமாகிய செய்திகளை இவ்வரிய பத்திரிகையின் 61-ஆம் இதழில் 'திருத்தவத்துறை' என்ற தலைப்பின்கீழ்த் தெளிய விளக்கியுள்ளேன்.

6. திருவாலந்துறை

சம்பந்தமூர்த்திகள், 'பொன்னித் தென்கரைத்தானம் பல பணிவா'ராய்த் திருப்பராய்த்துறையுட் புகுந்து ஆங்குச் சிவபிரானைத் தொழுது பின், திருவாலந்துறை, திருசசெந்துறை என்ற இருதலங்களையும் வணங்கித் 'திருக்கற்குடிமலை சேரவந்தார்' என்று சேக்கிழார் பாடியிருத்தல் காணலாம்[1]. இவற்றுள் திருவா

1. பெரியபுராணம், திருஞான. 339-42.

லந்துறை எனப்பட்ட தலம் இங்குச் சிறப்பாக நோக்கத்தக்கது. காவிரிக்கு வடகரையில் அமைந்த தலங்களைக் கூறுமிடத்தே,

"திருக்கானூர் பணிந்தேத்தி...அன்பிலாலந்துறையின்
முன்னவனைத் தொழுதுபோற்றி"

என அன்பிலாகிய ஆலந்துறை சம்பந்தரால் முன்னரே வணங்கப் பட்டமையால்[1] தென்கரைத் தலங்களுள் ஒன்றாக அவர்கூறிய இத்திருவாலந்துறை வேறோர்தலமே என்பது தெளிவாம். அஃது யாதோவெனில்—திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே 7 மைலில் காவிரிக்குத் தென்கரையில் உள்ளதும், அந்தநல்லூர் என்று இப்போது வழங்குவதுமான தலமே என்க. இவ்வூரிலுள்ள சிவாலயம் பழமை வாய்ந்திருத்தலோடு, முதற்பராந்தகன் முதலிராஜராஜன் என்ற சோழர்கள் காலத்தவும், பிற்பட்ட பாண்டியர் காலத்தவுமான சாஸனங்கள்பல உடையதுமாகும். அவற்றிலெல்லாம் அத்தலம் அந்தவனல்லூர், அந்துவனல்லூர் என்றும், அதன்கணுள்ள சிவாலயம் திருவாலந்துறை என்றும், ஆங்குக் கோயில்கொண்ட சிவபிரான் வடதீர்த்தநாதர் என்றும் வழங்கப்பட்டிருத்தலைக் காணலாம்.[2] [வடதீர்த்தம்—ஆலந்துறை]

"பூரத திருவிழவும் பூமியெழு மாலையும
டாரித்த பாசுபத மூர்த்தியையும்—வாரத்தாற்
செய்தான் புகழந் துவனல்லூர் தென்னுறைகை
மொய்தா ருடையான் முயன்று" (S. I. I. Vol. viii, No. 661)

என்ற சாஸனவெண்பாவும் இங்கறியத் தக்கது. அந்துவனல்லூர் —அந்துவன் என்பாற்குரிய நல்லூர். அந்துவன் என்பது சங்க காலமுதல், மக்கள் பெயராக வழங்கியதாகும்.[3] முதலிராஜராஜ சோழனுக்கு முன்புஆண்ட உத்தமசோழன்காலத்தே, இவ்வாலந்துறைச் சிவாலயத்துக்குத் திருப்பதியமொன்று[4] வழங்கிவந்ததென்று அவ்வூர்ச் சாஸனமொன்று கூறும். இப்பதிகம் திருத்தவத்துறைக்குப் போலச் சம்பந்தமூர்த்திகளாற் பாடப்பெற்றதாகவே சேக்கிழார் வாக்கைக்கொண்டு கருதல் தகும்.

7. திருச்செந்துறை

இங்ஙனம், திருவாலந்துறை சென்றுவணங்கிய சம்பந்தமூர்த்திகள் அடுத்துத் 'திருச்செந்துறையே முதலா வழுவில்பலகோயில்கள் சென்று' வணங்கினர் என்று சேக்கிழார் கூறுவர். இப்பெரி

1. பெரியபு. திருஞான. 308.
2. I. M. P. Tp. Nos. 371, 374.
3. 'அந்துவற்கொரு தந்தை'(பதிற்.), 'நல்லந்துவனார்' முதலிய காண்க.
4. S. I. I. Vol. iii, p. 139.

யார் கூற்றின்படி, திருச்செந்துறை என்பது காவிரித் தென்கரையதேயாதலின், அதன் வடகரையில் அப்பெயர் கொண்டுள்ள எத்தலமும் ஆகாது என்பது தேற்றம். இத்தென்கரைத் திருப்பதி திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே 6 மைலிலும் மேற்கூறிய அந்துவனல்லூர்க்குக் கிழக்கே 1 மைலிலும் உள்ள திருச்செந்துறை என்ற ஊரேயாகும். இவ்வூரும் பழைமையான சிவாலயமுடையது. இவ்வாலயத் திருமதில்களில், முதற் பராந்தகசோழன் காலத்துச் சாஸனங்கள் பலவும், பிற்பட்ட சோழர்சாஸனங்களும் வரையப்பட்டுள்ளன.[1] இவற்றினின்று, இத்தலம் ஈசானமங்கலம் என்ற பிரதேசத்தைச் சார்ந்த தென்பதும், அப்பராந்தக சோழன் மகனை அரிகுலகேசரியின் தேவியால் கற்றளியாக இவ்வூர்ச் சிவாலயம் திருப்பணி செய்யப்பெற்ற தென்பதும்,[2] இத்தலத்துச் சிவபிரான் திருச்செந்துறைக் கற்றளிப்பரமேசுவரர், சந்திரசேகரர் என வழங்கப்பட்டனர் என்பதும் விளங்குவன. சம்பந்தமூர்த்திகள், திருவாலந்துறையிற்போல், இத்தலத்துக்கு எழுந்தருளி வணங்கினர் எனப்படுதலால் அவர் திருப்பதிகம் பண்டு இதற்கும் இருந்ததாக வேண்டும் என்க.

III வைப்புத்தலங்களுள் இடம்விளங்குவன

8. ஏமநல்லூர்

அப்பர்சுவாமிகளது அடைவு திருத்தாண்டகத்தே 'எச்சிலிளமர் ஏமநல்லூர்' எனவருந் தொடருளது. இதனில், ஏமநல்லூர் என்று கூறப்படுவது, தஞ்சைப் பெரியகோயிலிற் கண்ட சாஸனமொன்றில்,

"மண்ணி நாட்டு ஏமநல்லூராகிய
திரைலோக்கி மஹாதேவி சதுர்வேதிமங்கலம்"

என்று கூறப்பட்டிருத்தல்[3] கொண்டு, ஷ ஜில்லா கும்பகோணந் தாலுகாவில் உள்ள திரைலோக்கி என்ற ஊரே என்பது விளக்கமாகின்றது.

9. இரும்புதல்

திருவீழிமிழலைக்குரிய திருத்தாண்டகத்தே 'இரும்புதலார இரும்பூளையுள்ளார்' எனத் திருநாவுக்கரசுநாயனர் பாடியிருத்தல் காணலாம். இதனுள், இரும்புதல் என்பது ஷ ஜில்லா மாயூரந் தாலுகாவில் இரும்புதலை எனவழங்கும் ஊரே என்பது, அவ்வூர்ச்

---

1. I. M. P. Tp. Nos. 367-379.
2. S. I. I. iii, 96.
3. Ibid. Vol. iii, p. 317.

சிவாலயத்தே, முதல் இராஜராஜசோழன் முதலியோர் காலத்து அமைந்த சாஸனங்களிலே—

"மனுகுலசூளாமணிச் சதுர்வேதிமங்கலத்துத்
திருவிரும்புதலுடைய மஹாதேவர்"

என வருந் தொடரால்[1] தெளிவாகின்றது.

10. இடைக்குளம்

அடைவு திருத்தாண்டகத்தே 'வளைகுளமும்..இடைக்குளமும்' என இரண்டு தலங்கள் அப்பர்சுவாமிகளாற் கூறப்பட்டுள்ளன. இவற்றுள், இடைக்குளம் என்பது, ஷை ஜில்லா பாபநாசந் தாலுகாவில் உள்ள மருத்துவக்குடி என்ற ஊராகும். இதன்கணுள்ள சிவாலயத்துக் கண்ட சாஸனங்களில்,[2] இக்கோயின் மூர்த்தியை,

"உய்யக்கொண்டார் வளநாட்டுத் திரைமூர்நாட்டு...
திருவிடைக்குள முடையார்"
"உடையார் திருவிடைக்குளமுடையார"

என வழங்குதல் காணலாம். ஆகவே, சோணாட்டு வைப்புத்தலமே இஃது என்பது பெறப்படுகின்றது.

11. வளைகுளம்

மேற்காட்டிய திருத்தாண்டகத் தொடருட் குறிக்கப்பட்ட வளைகுளம் என்ற தலம், வடவார்க்காடு ஜில்லா அரக்கோணந் தாலுகாவில் வளர்புரம் என வழங்கும் ஊராகத் தெரிகின்றது. இவ்வூரிற் கோயில்கொண்டுள்ள சிவபிரானை—

"வளைகுளத்து நாகீசுவரமுடையார்"

என்று சாஸனங்கள் வழங்குதல்[3] அறியத்தக்கது.

12. சண்ணை

க்ஷேத்திரத் திருத்தாண்டகத்தில் 'கண்ணை களர் காறை கழிப்பாலையும்' என்னுந் தொடர், அப்பர் சுவாமிகளாற் பாடப்பெற்றுளது. இதனுள் கண்ணை என்பது, ஷை ஜில்லா திருவண்ணமலைத் தாலுகாவில் உள்ள செங்கண்மா என்ற பழைய ஊரின் பெயராகத் தெரிகின்றது. மலைபடுகடாங் கொண்ட நன்னன் வேண்மானைச் செங்கண்மாத்துவேள் என முன்னோர் கூறுவதால், இவ்வூர் சங்ககாலப் பிரசித்தியுடையதென்பது தெரியலாம். இதன்பாலுள்ள சிவாலயம், திருவிடபத்துறை எனச் சாஸனங்களில் வழங்கப்படுகின்றது. இக்கோயிலின் தெற்குத்திருமதிலொன்றில்

---

1. I. M. P. Tj. 994.
2. Ibid. Tj. 1000.
3. Ibid. NA. 146-8.

"திருவள ரும்புயன் தேன்கண்ணை யாட்கொண்ட நகாயனித்
பொருள்வள ரும்புவி யிற்பொலி வெய்திப் பொருந்திடவே
உருவளர் தோகையின் மேல்வந் துதித்தெழு ஞாயிறுபோற்
கருவளர் கந்தனைக் கற்பித் தடியிணை கண்டனனே"

எனத் தனியே வரையப்பட்ட செய்யுட்சாஸனத்து,[1] கண்ணை எனக் கூறப்பட்ட ஊர் இச்செங்கண்மா என்று தெரிவதால், தேவாரவைப்புத்தலம் இதுபோலும்.

13. திருக்காரிக்கரை

திருநாவுக்கரசு நாயனாரும் ஞானசம்பந்தமூர்த்திகளும் திருக்காளத்திக்குச் சென்ற காலங்களில், இடையே திருக்காரிக்கரை பணிந்தனர் என்று சேக்கிழார் கூறுகின்றார்.[2] இத்தலத்தையே சுந்தரமூர்த்திகளும் தம் திருவிடையாற்றுத் தொகையுட் குறிப்பிடலாயினர். திருக்காரிக்கரை என்பது செங்கற்பட்டு ஜில்லா பொன்னேரித் தாலுகாவில் உள்ள ராமகிரி என்ற ஊரே என்பது, அவ்வூர்ச் சிவாலயத்துக் கண்ட சாஸனங்களிலே[3]—

"ஜெயங்கொண்ட சோழமண்டலத்துக் குன்றவத்தனக்
கோட்டத்து நின்றையூர்நாட்டு நடுவின்மலை
திருக்காரிக்கரையுடைய நாயனார்"
"திருக்காரிக்கரைப் பிள்ளையார்"

எனவருந் தொடர்களால் அறியப்படுவது. இதனை வாலீச்சுரம் என்றும் அச்சாஸனம் வழங்கும். காரிநதியின் பக்கத்து உள்ளதனால் அத்தலம் இப்பெயர் பெற்றது. இந்நதி, இப்போது இராமகிரிக்குச் சிறிது விலகிச்செல்லும் காலேறு என்று கருதப்படுகின்றது. காலேறு என்பது தெலுங்கில் கறுப்புநதி என்ற பொருள்பயப்பதாகலின், அதுவே அப்பொருளிற் காரிநதி எனத் தமிழில்வழங்கியதாக வேண்டுமென்றும், அந்நதிப் பக்கத்துள்ள தலம் திருக்காரிக்கரை எனப்பட்டதென்றும் கொள்ளத்தக்கன. காரியாறு எனச் சங்கநூல்கள் கூறும் நதி இதனின் வேறுகும்.[4]

14. திண்டீச்சுரம்

திருநாவுக்கரசு நாயனாரது அடைவுதிருத்தாண்டகத்தில்—
"கோடீச்சரங் கொண்டீச்சரந் திண்டீச்சரம்"

என்ற தொடர் வருதல் தெரியலாம். இதனுள், திண்டீச்சரம்

1. S. I. I. Vol, vii, No. 117.
2. பெரியபு. திருநாவுக். 343; திருஞான. 1015.
3. I. M. P. Cg. 741-2.
4. சேரன் செங்குட்டுவன், பக். 102, கீழ்க்குறிப்புக் காண்க.

என்ற தலம் தென்னார்க்காட்டு ஜில்லாவிலுள்ள பிரபலநகரான திண்டிவனம் என்ற ஊரே என்பது ஆங்குள்ள சாஸனங்கள் பலவற்றால் அறியப்படுகின்றது.[1] சங்ககாலத்தே, சிறுபாணாற்றுப்படை கொண்ட ஓய்மானாட்டு நல்லியக்கோடன் என்ற தலைவன் ஆட்சிபுரிந்த கிடங்கில் என்ற நகரின் பகுதியே இத் திண்டீச்சுரமாகும். இதன் 'ஸ்தலவிருக்ஷம்' புளியமாமாதலின் திந்திருணீவனம் என்பது திண்டிவனம் எனத் திரிந்து வழங்கியதென்பர்; [திந்திருணீ—புளி]. இத்தலத்துச் சிவாலயத்துள்ள சாஸனமொன்றிற் கண்ட வெண்பா வருமாறு:—

"சீராருந் தென்கிடங்கிற் றிண்டீச் சுரத்தானுக்
கோராருங் கன்மண் டபமெடுத்தான்—பாராரும்
பொன்னானை பூயகளகோன் புத்த வீராசசிங்கன்
என்னானை யாரையா ரோறு"[2]

இவற்றால், திண்டீச்சுரம் என்பது, அறிஞர் சிலர் கருதுமாறு, திண்டுக்கல் போன்ற தலமன்று என்பது சாஸனவழக்கால் தெரியவருகின்றது.

15. மயிண்டீச்சுரம்

சம்பந்த மூர்த்திகளது க்ஷேத்திரக்கோவை 7-ம் பாட்டில்—'மயிண்டீச்சுரம் வாதவூர் வாரணாசி' எனவருதல் காணலாம். இதனால், மயிண்டீச்சுரம் என்பது, சேலம்ஜில்லா, தர்மபுரித் தாலுகா அதமன்கோட்டையில் உள்ள சிவாலயத்தின் பழம்பெயராகும். இதன்கணுள்ள சோமேசுவரர்சந்நிதித் திருமதிலிற் கண்ட சாஸனங்கள் இக்கோயின் மூர்த்தியை, மயிந்தீசுவரமுடையார் என வழங்கியிருத்தல்[3] அறியத்தகும். மேலே கூறிய திந்திரிணீச்வரம் என்பது திண்டீச்சுரம் எனத் திரிந்தவாறு, மயிந்தீச்வரம் என்பது மயிண்டீச்சுரம் என மாறியதாம். இவ்வாலயமுடைய அதமன்கோட்டை என்பது அதியமான்கோட்டை என்பதன் மரூஉவாகும். இதனால், இவ்வூரின் பழைமை பெறப்படும்.

இவ்வாறே, சாஸனங்களை நீள ஆராய்ந்து செல்லுமிடத்து, தென்னாட்டுப் பழைமை வாய்ந்த மூர்த்தி தலந் தீர்த்த முதலியவற்றின் விசேடங்களைப்பற்றி எண்ணிறந்தவை அறியலாகும். 'அதியரையமங்கை யமர்ந்தான் றன்னை' என அப்பர்சுவாமிகள்

1. I. M. P. Cg. 448. (190)
2. S. I. I. vii, p. 423; M. E. R. No. 210 of 1902.
3. I. M. P. Sm. Nos. 68-73.

பாடிய தலம், திருவதிகையே என்பது கல்லெழுத்துப் பலவற்றால் அறியப்படும்.[1] வைப்புத்தலமான திருவிடைவாய்க்குச் சம்பந்த மூர்த்திகளது திருப்பதிகம் புதியதாகக் கிடைத்திருப்பது[2] இச் சாஸனவாயிலாகவே யன்றோ? யான் மேலே எழுதியவை, தென் னாட்டுச் சிவாலயங்களைப்பற்றிச் சாஸனமூலம் அறியக்கிடப்பன வற்றுள் ஒருபகுதியே என்க.

1. I. M. P. Pd. 76; S. I. I. iii, p. 234.
2. M. E. R. No. 8 of 1918; செந்தமிழ், தொகுதி-17. பக். 161-172.

உ


இந்திய மான்மியம்.

பிரஹ்மஸ்ரீ கவிகுஞ்சரதாஸ

N. கோடீசுவர ஐயர் அவர்கள், B.A.,

(சென்னை - ஹைகோர்ட்டு டிரான்ஸ்லேட்டர்)

இயற்றியது



Madras:

Printed at M. V. Press

1914.

உ

இந்தியமான்மியம்.

விநாயகர் வணக்கம்.

மாமதுரைப் பொற்று மறைக்கரைவி நாயகனன்
றாமதுரை பேசச்ச நன்மைதரும்—மாமதுர
வாசகத்தா லிந்திய மாநாட் டதன்மகிமை
தாசனுரை பேசவருள் தா.

இராகம்-கௌமனோஹரி - ரூபகதாளம்.

(இந்தியாவின் ஸ்தானம்.)

கந்துங்கடல் சூழும்வைய - கத்தினைமேல் நாட்டார்
கருதியேஐந் தெனவகுத்த - கண்டங்களில் சிரேஷ்ட
முற்றிடும்ஆசியாவெனும்பே ருற்றகண்டம துதிலே
உள்ளசிறோர் யாதுருக்கி - ஒங்கியதினை மதிலே
சுற்றியசீனாடகுடக்கில் - ஆன்னரபித தானம்
கொல்பாரசீகமொடு - சூழ்பருமர் தானம்
சித்தமிணிப் புறஉயர்தி - பேசுதுமுத லான
தேயங்கட்குத திலகமெனத் - திகழ்வதிந்தியா நாடே. (2)

(இந்தியமாதின் அங்கங்கள்.)

கூந்தலென மேகமென்றும் - குலவிமயம் சிரமே
குளிர்நமிரு புறக்கடலில் - குவிமுகில்கள் கரமே
வேந்தர்பிரதி நிதியுறையும் - மேனிலமா நனமே
மேற்றிசைகீழ்த் திசைமலைகள் - விளங்குபெருந்தனமே
மாந்துகங்கை யோடுவிந்து - வளநாடும் உரமே
மத்தியமா காணமென்னு - மாநாடு தரமே
காந்தெழிற்பம் பாய்சென்னை கழலொடிரு
காரிகையிந் த்யாவெனுநாம் - கண்மணிக்குத் தானே. (3

(இந்தியமாதின் அலங்காரம்)

வங்காளப் பட்டுடுத்தி - வளைந்தநெடுந் தரங்க
வாருதிமே கலையிறுக்கி - மன்கோலார்ச் சுரங்க
சிங்காரத் தங்கமதில் - வங்காளக் கடலும்
திகழெழுமா நதிகளுமேல் - திரை அரபிக் கடலும்
நன்காக அளித்தநவ - ரத்நமணி இழைத்த
நற்பணிபூண் டியர்மன்னர் - பொற்றுறையில் தழைத்த
துங்கார முத்துவடச் - சோபிதத்தால் இருளோத
தாரந்தில முழுவதிலும் - சிறந்ததிந்தியா நாடே. (4)

(இந்தியாவின் பொதுச்சிறப்பு.)

விண்ணுறைதே வருமுறைய - விரும்புகின்ற நாடு
வேனிலக லாதுதென்றல் - விருந்தளிக்கும் நாடு
கண்ணகல்பூ மாதிருகண் - எனத்தகுந்த நாடு
கடன்முரசம் புறமுழங்க - சர்ச்சனைசெய் நாடு
எண்ணியமுக் கோணசக்தி - மணவிராவும் நாடு
இமயமுதல் குமரிவரை - எல்லைகொண்ட நாடு
புண்ணியநா டென்போக - பூமியென்னும் நாடு
பூமகள்வீற் றிருக்குமலர் - பொன்னுமிந்தியா நாடே. (5)

(இந்தியாவின் வளம்.)

வானிலந்த சற்பசமாம் - பாம்பனைத்தெங்கு குலையும்
வளர்கமுகு தெங்கெனவாம் - இலைப்பழுதில் குலையும்
கானிலந்த கழைகமுகு - தாமெனவே செழிக்கும்
கரும்பெனநெற் கதிர்வயலில் - ராகுகாணும் செழிக்கும்
ஊனிலகி உயிர்தரிக்கத் - தானியபண்டம் யாவும்
உறுபோகந் தனைத்தரிய - உயர்பொருளும் மேவும்
ஆனிலுயர் தேனுவென - ஆகதியெல்லாம் அளிக்கும்
அன்புருவ மானவிந்தியா - எனப்புகழும் நாடே. (6)

எரிக்குளிகா கொடியருணைத் - தினமிடர்செய் தாலும்
ஈரமக லாதபெரி - யோரிதயம் போலும்
தரிக்கவொண்ணாக் கோடையினில் - குளிர்துயிர்கள நலியும்
ததியிலுந்தண் ணீர்தமருத் - தானம்பல பொலியும்
பருத்தமத யானையின்வெண் - மருப்பொடகில் தேக்கும்
பறித்துருட்டி நதிமருதப் - பணையருகிற் சேர்க்கும்
கருத்தமுகில் முழவொலிக்கக் - கண்டுமயில் நடிக்கக்
கானக்குயில் செய்யுமிந்தியா - வானதுகம் நாடே. (7)

கருங்குவளை மேய்ந்தெருமை - கன்றுள்ளிச் சொரியும்
கனபாலுண் டுயர்வாளை - கதலியினிற் பரியும்
பருங்கதலிக் குலைமாவின் - பைங்கனியிற் சாயும்
பணைத்தவம் மாங்கனியும்பல - வின்கனியில் தோயும்
அருங்கொம்பிற் றேனருந்தி - அத்தேனின் அடைக்கொம்
படிகொம்பாய் மாதுளைச்செங் - கனியந்தாய்ப் படிக்கும்
மருங்கிற்பள்ளிப் பிள்ளைகள்போல் - வானரம்பந் தடிக்கும்
மாவளமிந் தியாவளம்வர் - ணனையினா லன்றே. (8)

வேறு.

இராகம்-எதுகுலகாம்போதி-சாபுத்தாளம்.

(இந்தியமலைகள்.)

மாதாசியுமை பின்னைதந்தவ மாமகமென்னப் பொற்றவிமாசல
மால்வரைச்சூழ தமிழ்முனியோடுதண் மந்தமாருதம்வாழ்பொதிக்குமிடை
போதரிக்கண் மடந்தையர்கூந்தலைப் போலுமேகமு நாகமும் வாழ்விந்தப்
பொருப்பும்நீல கிரியுமகிழ்வொடு பூவைவண்ணன் உறைதிருவேங்கடப்
பூதரமும் பழமுதிர்சோலையும் பொற்புறும்பழனிக் குலவெற்பும்வான்
புல்லுங் கொல்லிமலையுங் கொடுங்குன்றும் பூவிலேழுடன்று வானையளந்த
சீர்தான்றனை மானுங்குற்றாலச்சி லம்பொடின்னும்பல் திக்கயமொத்த
திண்சயிலங்கள் மன்னிச்செறிந்து திகழ்வதிந்தியா வென்னுநாடே.

(இந்தியநதிகள்.)

காமமாமதி தங்குங்கயிலைக் கடவுள்வார்சடை தன்னிலொடுங்கி
கரக்காமானற் பகீரதன்வேண்டக் களித்துமாநிலந் தன்னில்வந்துற்றே
ஏமமார்கங்கை சிந்துஸரஸ்வதி யமுனைமாநதியுங் குடைந்தாடும்
ஏழைமார்கள் தம்நீள்குழற்குற்ற இயற்கைமாமண மேடவர்கூடும்
தாமமார்புனிதப் பெருவெள்ளக்கோ தாவிரிகிருஷ்ணை நருமதைபெண்ணையும்
தரங்கமாரும்பூங் காவிரிவைகை சமதமாதிய நடவிரும்பும்
சேமமார்தரும் நீத்தமருமல் திகழுந்தாமரவர் நியோடின்னும்பல்
திதிக்குந்தீபபுண லாறுகளார்ந்து செழிப்பதிந்தியா வென்னும் நம்நாடே.

வேறு.

இராகம் - கமாசு - சாப்புத்தாளம்

(இந்தியநகரங்களின் பொதுசிறப்பு.)

ஆழிபோலகழியும் விசும்பார்ந்த அணிகொள் மாமதில்களும் புறஞ்சூழ்ந்த
ஏழுமாழுகி லுடலினைக்கீறி எழுந்துவிண் ணுலவிய நெடுங்கொடிய
மாழைமான்விழியார்கள் தம்முகமு மதியும வேற்றுமை யின்றியேதெரியும்
சூழுமாளிகை யிருபுறம் நெருங்கித் துலைவிலா நெடுங் கோரணவீதி. (11)

அநந்தமார்ந்தன வார்ந்தன மறையோ ரக்ரகாரங்க ளரசர்தங்கோயில்
அநந்தமார்ந்தன வார்ந்தனவணிக ரணிகொள்வீதி வேறினத் தவர்தெருவும்
அநந்தமார்ந்தன வாவணங்களுநந்த வாலயங்களு மாடரங்குகளும்
அநந்தமார்ந்தன வார்ந்தனகல்விச் சாலையோடு நாவலர்கழகமுமே. (12)

குட்டிமங்கள் குளிர்ந்திடுவானம் குலவுசாலைகள் சோலையுய்யானம்
பட்டிமண்டபம் பன்மலர்த்தடங்கள் பதுமையாரும் நீராழிமண்டபங்கள
தட்டில்லாதன்ன மளித்திடுஞ்சாலை தனைநிறைந்திடும பொக்கிஷசாலை
பட்டமார்ந்தல் யானையின்கூடம் பரியினபந்திக ளார்ந்திடுங்கூடம். (13)

அரியகாட்சிப பொருளுளசாலை அடவிமாமருக மடைபடுசாலை ய்சாலை
பெரியநோய்க்குங் கண்ணோய்க்குமொண்ணோய்க்கும பிரீதியோடுஞ்சிகிச்சைசெ
திருமணுய்க்கர் மால்தாஜ்மாலினைய சிற்பநூற்றிறம தெரித்திடுமாலும்
பெரியஞாயஸ் தலங்களோடின்னும்பிறவிடங் களுமமைந்தன நகரே (14)

வேறு.

(இராகம் - எதுகுலகாம்போதி - அதிதாளம்.)

(கல்கத்தா)

அம்பா மலர்த்தலைபுலமினில்மிக் - கணிகாநகராய் உயரியமா
அரண்மனையெனுமா ளிகைகோடி - விரவிவிளங்கிடு ரினைத்தகைய
செம்மாமணிவெங் கதிர்காட்ட - திங்களினக்குகளுந்தண் கதிர்காட்ட
சிறந்ததுறைமுக மாயிலகுகிச்-செனப்பெருகலகமெப்பிருத்தனப்பெருக்கும்
கைம்மாத்தொழிலுட் பிறபிறவெல - காரணகாணிப மாநலமும
கடுங்கியநதியாகிய ஊக்ளிக-கரையினிலுறையவைபலவும மேவும்
செய்ம்மாவுடைநக ராகியகா - ப்பிடப்பூரவிப்பூர் ஹௌராவும
சேர்ந்துயரளகா புரியைநகை - செயயுங்கல கத்தாநகரே. (15)

காசி.

ஆயிரமாமுக மோடும அரியபெரிய வரையினின் தோன்றி
அமிதமகிமையொடு மிகுந்தபுய - அழமுமபாலமும் வெண்ணிறமும்
மாயிருஞாலந் தனிலதன்னை - மனத்காலொருக்கா லினைத்திடினு
மதியுடையோருந நீண்டிடிலய - மதியிலசே தனருமன்செய்
பாயிருட்பாவந் தன்னையொழித் - தேயவர்க்கிபா நன்மைதரும்
பண்புளகங்கா நதியுடதில் --படியவருந்திர ளடியவரும்
வையுறுமதாளி விசாலாக்ஷி - விச்வேசுர நலை யாலயமும்
வீய்ந்தோர்முக்தி பெறும்பெருவி - சேஷமுமுள காசிநகரே (16

(டில்லிமுதலிய நகரங்கள்)

துங்கத்தினகர குலதிலகர் - தொல்பதியான அயோத்திநகர்
சோதிகொள்லெக்ஷ்மணை புரியோடரித் - துவாரமதெனு மாயாபுரியும்
திங்கட்குலதில காதிபரத் - தினபுரியிற் த்ராப்பிரஸ்தநகர்
ஸ்ரீஜயகோகுல பாலர்மகிழ் - இருவடமா மதுராபுரியும்
தங்கத்திருமதி லார்லாகூர் - தற்கால த் இந்தியராஜ
தானியெனவு மகமதியரா - சாண்டபுராதன தலமெனவும்
செங்கைத்தொழில் மிக்குளதெனவும் - செய்தொழிலமை ட் டடங்கள்பல
திகழ்ந்ததிபெருமையு மமைந்ததெனச் - செப்பிடுமிடில் லிமாநகரே. (17)

வேறு.

இராகம்-சேஞ்சுருட்டி - ஆதிதாளம்.

(பம்பாய் முதலிய நகரங்கள்)

பூரியெனுமுஜைனி நாகபோடகிய ரா - புகழுள காசிமாலைம
பொற்குவெணசல வைச்சில கொடிசூழ் கத்ய - பொர நதிய நமமாலும்
ஆருயராக்ராபுரி நாகபுரம் - ஆங்கிலர்முதலுமுதலாய்
அமர்ந்திட மாகியகல்கத்தாவில் - அமலபம்பாயினையே
நேருயர்மாக்க ரம்பகுட சாகர - நீளகரையிதில் மேவும்
திகரில் துறைமுக மாம்பொருட்சிறனில - திரம் திகமாகிய தாய்
ஏருயரிதத்யா மாநகரங்களில - இரண்டாம் நகரெனவே
எண்ணுமப் பெருமை யுள்ளதாம்பாயெனப் - கண்ணியமாநகரே. (18)

(மதுராஸ் முதலிய நகரங்கள்)

அதிபலமராட்டிர வீரர்களுமாய் - அரசுசெலுத்திய தூனா
நகரனுள்ளதுறை க்லாரலியடிநுதா - அழகுள பலரோடா
மதிபுனைமைசூதில் மைசூர் பரிசரு-ஷ்மாபித் தூள பங்களூர
வானதிருச்சியஃபற் காஞ்சிபுரத்திலெ - வாமாயுறை கோலார்
நதிகளிரண்டுட அமருட்டுராதன - நகருமை ஸாம்யா
நகரைக்குமிபாதி ரீ இணைமுள்ள - னைகரசித்த திரபாதும்
புதியதுபட்டியா மூனாருநகராம். - ஐநதராபாதையுகமாய்
புதிய லர்யகளை சகத்தினிலுமுதா - லாம்மதராஸ்நகரே (19)

வேறு.

இராகம்-கேதாரம்-ஜம்பை தாளம்.

(காஞ்சி.)

நங்கை காமாக்ஷி தங்கி மேவும் கொம்பர
நாகராலயங் குமரகோட்டமொடு குழறும்
சங்குலைவுகரவரத பாலுப உறைகோயில்
தம்பெம்பல கோயில நகரம் மேவை

இந்தியமான்மியம்.

துங்கமிகு சோழமஹா ராஜன் வீற்றிருந்து
துரைத்தனம் செய்தநகர்மாமலரின் வாஸம்
தங்கிமிகு தேனொழுகு சோலை ஓடுவாவி
தான்சிறந்த நாஞ்சில்சூழ் காஞ்சிமா நகரே. (20)

(தஞ்சை முதலிய நகரங்கள்.)

கூடலூர் கும்பகோண நகரும் நாகை
கொண்டல்தவழ் கோபுரத் தஞ்சைமா நகரும்
பாடலூறு திருச்ரபுர தலமும் கோயம்
பத்தூரொடும் சேலமுநகமண் டலமும்
கேடில் சித்தூரொடு நெல்லூரும் அழகு
கிளர்கஞ்சநகர் பந்தர்விஜய நல்லூரும்
கோடியருந திருவாங்கூர் கொச்சி தூத்துக்
குடி திருநெல்வேலி யெனும்படி புகழும்நகரே. (21)

வேறு.

இராகம் நாதநாமக்கிரியை-ஜம்பைதாளம்.

(தென்மதுரை)

மாமலை யத்வஜராஜ புத்ரி மூன்று
மாதனத்தோடு மலைதரிமீன நேத்ரி
சாமளவர்னங் கொளெழில் காத்ரி ஆதி
சம்புவெனும ரஜதகிரியானகயி லாத்ரி. (22)

மாமகிப ரோடு மமர் புரிய நேரில்
வந்தபோதவள் தனங்களிலொன்று மறையத்
தாமவரை மணந்தின்பம் நிறையச் சுந்
தரபாண்டியனெனமகுடம் சூடிநிதம் உறைய (23)

பெற்றவரும் அன்பொடறு பத்து நான்கு
பெருமைத் திருவிளையாடல் உரிமையோ டியற்று
நற்றலைமைதாய் ரெத்ந முத்து நிகரும்
நற்றமிழ் கொழிக்குமகராலயதி கர்த்து. (24)

நலங்குலவு தமிழ்ச்சங்க மோடும் திருமல்
நாய்கர்மால் மூர்த்திதலம் தீர்த்தநல் விசேடம்
இலங்கு தென்மதுரைநக ரோடும்இன்னமும
நேகநகர் சேர்ந்தொளிர் வதிந்தியா நன்னாடே. (25)

இந்தியமான்மியம்.

வேறு.

இராகம்-நவரோஸ்-ரூபகதாளம்.

(இந்தியமாதின் குணங்கள்.)

ஸத்தியஞ்சீலந் தருமம் - தயைபொறைவி — வேகம்
சாருமதி நேர்மை பொருந் - காரியவி — வாகம்
அத்தியந்த மாதாபிதுர் - பக்திவிசு — வாஸம்
அரசவிசுவாஸம் அன்பில் - விரவிடமே — நேசம்
சக்திசௌரியவீர்யம் - யுக்தியின்வி — தாரம்
ஸாஸமரியாதை பொருந் - தன்மையொடு — தாரம்
சித்தபரிசுத்தமதி - வித்தையொடு — விநயம்
தி[illegible]வாக்குண ஒளிகொண்டிந்திய - தேவிகுண — மாமே. (26)

வேறு.

விருத்தம்.

ஆஸ்திகன் [illegible] கடவு ளருமறை யார்ந்த நாடு
ஸாப்திக மறையோ ரனைவருந் தழைத்திடு நாடு திவ்ய
க்ஷேத்திரம் ஆறாகி தீர்த்தம் [illegible] நாடு ஞான
மாதவத் [illegible] வழங்க [illegible] நாடே (27)

அரு[illegible] தனக்கு [illegible] மலிவரி [illegible]
பரமனை [illegible] பெரு [illegible] தெளிய [illegible]
அரியபல [illegible] சேவக [illegible]
வருடத்தில [illegible] வளர்ந்தோ டிருந்த நாடே. (28)

அகல[illegible] மருத [illegible] யோ [illegible] யாயர்
பிகவுறை முல்லை [illegible] வேலைசார் நெய்தனிலை
புகிலுறை மலையின் [illegible] முடிவிலாக் குறிஞ்சி யென்னும்
தகமைசால திணைக ளைந்துந் தழைத்துள இந்து நாடே. (29)

இனிய செந்தமிழ் [illegible] ஸம்ஸ்க்ருதம் [illegible]
கனிநயத் தெலுங்கு [illegible] கன்னட முயர் மாராட்ரம்
துனிநய மலையாளங் கூர்ச்சரம் [illegible] முதல வாய
பனிநயப் பதினெண் பாஷை பயிலுமா டிந்து நாடே. (30)

கற்பனை மணிகொள் ரத்நா கரமெனத் தகுந்த ராம
நற்கதை யாதி யாய நாற்பொருட் கேது வான
பற்பல விதிகா சங்கள் பாரதாதி யம்புராண
[illegible]

வரகவி ராஜசிங்க வால்மீகி வியாசர் மாம
துரகவி காளி தாஸன் சொல்பவ பூதி நற்சீ
கரகவி தண்டி பாணன் கருதக த்தியனோ டுஞ்சித்
திரகவி கீரன் மாக பிலன்திறற் பரணன் மாதோ. (32)

அணுவினைத் துளைத்த கண்ட வெளியினைப் புகட்டி மிக்கக்
குணுகிட வைத்த தென்னக் குறளினை யருளுந் தேவர்
குணமிகு ராம காதை குலவுசெந் தமிழிற் கூறும்
கணுவுடைக் கரும்பின் கட்டிக் கவிச்சக் ரவர்த்தி கம்பர். (33)

மெய்ப்புக ழேந்தி யௌவை மிகுதமிழ் வேத மென்னச்
செப்பிடு மாறிரண்டு திருமுறைத் திருவாய்ச் செந்தேன்
ஒப்பிலா மொழி பகர்ந்த உயர்திரு வாரூ ரான
அற்புதப் புலவர் மன்னி அமருநா டிந்து நாடே. (34)

வேறு.

இராகம்-மோகனம்.

(இந்தியசரித்திரம்)

(பழைய இந்தியராஜாங்கங்கள்)

இத்தகைய பெருமையுள இந்தியநா டாதியினி லெழிலா ரங்கட்
உத்தமவங் கம்கலிங்கம் காஸ்மீர மகதம்குளி ருறுமயாள் சாலை
மெத்தவுயர் நேபாளம் கோசலம்கே கயமொரவி ராடம் மச்சம்
தத்துபுனல் வங்காளம் ஸிந்துகாம் போஜம்கூர்ச் சரம ராடம். (35)

குடகொடுகொங் கணந்தெலுங்கங் கன்னடங்கர் நாடகம்நற்கொல்லஞ்சீர்த்தரா
விடம்திட தஞ சாலவங்கே ரளம்பாண்டி நாடெனும்பல் மேன்மை வாய்ந்த
இடங்கொள் தனிச் சிற்றரசு நாடுபல சேர்ந்தபெருந் திருநா டாகி
அடர்பெருமை யுலகினும்போய் நிறைந்துததும் பியகீர்த்தி யாள ராமால். (36)

பருதிமா மதிமரபின் குலவிளங்க வந்தமனு பகீரதசூ ரவாகு
விருத்திரி சங்கரிச்சர் திரணசிகன் சகரன்வலி மிகுந்தி லீபன
கருத்துபகி ரதன்ககுத்த னிரகுசிபி அப்பரிட னயன்மேபான் மாந்
சாந்தனிரா மன்பூரு ருவன்காதி புருபரதன் தரும னென்போர். (37)

ஆராழி தனிற்றுயிலு மருளாழி நிகரரச ரழகார் வானில்
ஓராழித் தேருடையோ னுலகிருளை யொதுக்கியொளி யுதவல் போற்றுஞ்
சீராழி யுருட்டியிட லிருள்கற்றி யருட்செங்கோல் செலுத்தி யாள
ரோராழி சூழுலகி னிகரிலா நாடாகி நிலவிற் றன்றே. (38)

(அராபி தேசத்தார் பிரவேசம்)

நில்லாது வாழ்க்கையெனும் பொல்லாத பழஞ்சொனிச மாதலாலும்
பொல்லாத காலமென்ப தெல்லார்க்கும் பொதுவாய்ப்போ தருதலாலும்
வில்லாள ராய்ப்பகைவே ரறுத்துமிகு தீரரென விருது பூண்ட
வல்லாள ரானமுன்சொல் லரசர்வீரம் புறவவாயின வந்த மன்னர். (39)

வலிகுன்ற வானின்ற மிருளவென்ற செங்கதிர்மா மகிபன் றனை
மெலிவொன்றிமேல்கட லின்மறைகலும்பின்னெளிமழுங்கிவிண்மீனெல்லாம்
மலிவொன்றித் தனிநின்று மிளிர்கின்ற தகுதியிலிருள் வருவதேபோல்
புலியொன்று சிறுதுறையர் தலைநின்ற பொழுதயவர் புகுந்தா ரன்றே.(40)

விந்தார மானநம திந்தியா நாட்டிவிந்த விதமயல்தே
யதுதாக ளானவிட நிகாசிதியர் பாரசிகர் யவனர் மாம
தந்தாரு மகமதியர் புகவொன்று சேர்ந்தவரைத் தடுத்திடாது
மந்தாருந் தயிரெனப்போ ரினியுடைந்து சிதறினர்நம் மன்னர் தாமே (41)

போரின்மா வரசரெலாந் தனித்தனியே தோற்றுடைந்து போக நாடும்
ஆருமா தரிப்போரற் றெடுப்பார்கைப் பிள்ளையைப்போ லாக வந்து
சாருமா மகமதியர் தலைவராங் கஜனிமா மகம தோடும்
கோரிமா மசமகா தியமகம தியர் நாட்டைக் கொண்டா ரன்றே. (42)

(மகமதிய அரசர்.)

அடுத்தடுத்து ஆயிரண்டு தரம்நாட்டிற் புகுந்ததே வாலயங்கள்
இடித்தவற்றில் திரவியங்கொண் டேகினன் கஜனிமா மகம தென்போன்
குடிப்புகுந்து நாட்டிலா சாண்டவொரு மகமதியன் கொடுமையாற்கான்
நடுப்புதுங்கு குடிகட்கை நவேட்டை யாடினனக் கலமிலோனே. (43)

கற்பழித கனிறனைய மகமதிய ரரசியற்றுங் காலத் தந்தக்
குப்பசன னுக்கணைக் கொடுமையினில் வென்றகுடி கேடன் தைமூர்
என்பவனும்படையொடுதெண்ணிறந்தபேர்களைக்கொன்றிலக்கம்பேரை
வெம்புசிறைப் படுத்தியவர்க் குறைவளிக்கச் சோம்பியுயிர் வீட்டி னானே.(44)

(மோகல் சக்ரவர்த்திகள்)

பின்னமது திருநாட்டைப் பேணிநெடுங் காலமர சாண்ட மோகல்
மன்னவர்கள் தம்முளதி கீர்த்திமா னக்பரெனு நிகரில் வள்ளற்
பின்னவரி லரங்கசீப் மன்னவனுந் தன்மதப்பே ரபிமானத்தால்
சின்னபின்னஞ் செய்தனனம் முன்னவரி லவன்மதத்திற் சேரார் தம்மை.()

இவர்நாளில் டில்லிமா நகரெலா மொருநாளி லிழுதி செய்த
கவர்நாளின் கதநாக நிகர்நாதர் ஷாவுப்படை யெடுத்து வந்தான்
இவர்போதா தெனமேலை நாட்டவரிற் போர்த்துகே யருங்பிராஞ் தேயக்
[illegible]

வேறு.

(அங்கிலேயர் பிரவேசம்)

இவ்வகையடித்தபேர்க்கெலாமாளாய்ப்பிடித்தபேர் தமக்கெலாம்பெண்டாய்த
தெவ்விரு ளடர்ந்தித் தேயமு மெத்தத் தியங்கிடும் பொழுதிலவ் விருளாங்
கவ்வைய தகற்றிக் குடதிசை தயனிற் கருணையின் சந்திரோ தயமொத்
தெவ்வமி லிங்கி லாந்தென்னுங் குளிர்மிக் கெழில்குலாந் தீவினி லிருந்து.(47)

சலஞ்சலயஞ் சிலேயிற் செய்திடும் பதுமை தானெனும் படிக்கதி தவளங்
குலவிய வுருவு மிலகுநற் பவளக் கொடிபடர்ந் தனையசெங் குஞ்சித்
தலையு நீண்டகன்ற புருவமு முழந்தாள் தடவிய கரங்களு மார்ந்த
நலங்கிளர் வடிவும் நகைமிகக் காட்டா நயத்தொடு சுருங்கிய சொல்லும் (48)

உடலினைப் பொருளை யுயிரினைத் தருமபென் றுன்னியே பிடித்தது சாதித்
திடுந்திற லோடு முண்மையை மனச்சாட் சியினையே கடவுளாக் கருதுந
திடமுஞ்சோம்பின்மையாதியகுணங்கள்திகழ்ந்தவாணிகச்செல்வர்தமமில்
இடமகல் கீழிந் தியாச்சங்கத் தினரொன் றெழிற்பெயர் பூண்டிடு நல்லோர்.

(கீழிந்தியாக கம்பெனியார்.

இதவொடு கி.பி. பதினேழா நூற்றாண் டினிலிந் தியாவினை யடைந்து
சதமக னெனுமோ சுற்சக்ர வாகதி தன்னனு மதியினுற் சூரத்
ததின்முதன் முதலா யமர்ந்துபின் சன்னஞ் சன்னமாய்ச் சென்னைகல் கத்தா
முதலிய தானங் களிற்பண்ட சாலை முயலுநகம் வாணிபத் தினுக்கே. (50)

(அங்கிலேயர் அபிவிர்த்தியும் அரசாட்சியும்.

கோட்டைகொத்தளங்கள்தம்மொடுமமைத்தக்குடிப்புகுபிராஞ்சினரோடும்
போட்டியாய்ச் சுயதே யாதிப ரோடும் போர்புரிந் தருதயில் பிராஞ்சு
நாட்டவர் தம்மை நலிவித்து ராபர்ட் க்ளைவெனும் வீரன்றன் றிரம்
காட்டியபிளாஸிச்சண்டையிலவை ந்தகனத்ததோர்வெற்றியால்முதன்மை.()

அடைந்தது முதலாய்த் தமையடைந் தோரை யதிபராக் கியுமவர் தங்கீழ்
அடங்கிடச் செய்தும் மேதிலார் நாட்டை யடுத்தவர் தம்மொடு பாகித்
தடைந்துமிவ்வி தநாட்டினிற்பெரும்பாகமடைந்ததைப்போற்றிடவியபித்
திவொன்ஹேஸ்டிங்ஸொடுகரன்வாலிஸ்வெல்ஸ்லிபெண்டிங்டல்ஹௌஸியெனும். ()

ஆள்கையின் றிறமான் கமைந்தபே ராற்ற லதிபதிக் துரைகள்கூர் மதியாம்
வாள்வலத் தாலுங் கடவுளா கருத்தவ் விதமமைந் திருந்ததி னாலும்
தோள்வலிமிக்கஜதர்டிப்ஸல்டான்தொலைவில்சிந்தியாவொடும்ஹோல்கார்
கோள்வயச் சீயத் தோர்முத லான கொண்டலைச் சண்டமா ருதம்போல். ()

சயித்துப்பின் னாட்டிற் பெருங்கொள்ளைக் காரத் தக்கினரோடுபிண் டாரித்
தயித்தியப் பூண்டை வேரறக் களைந்து தண்ணிழல் பரப்பிய மதியைச்
சயித்ததங் குடைக்கீ ழுத்தரத் திமயா சலமுதல் தென்றிசை மலையன்
மயக்கன்னிக் குமரி வரையிலு மிருமா கடலிடை யொப்பினில் மன்னும். ()

(ஆங்கிலேயர்செய்த சீர்திருத்தங்களாம் நன்மைகளும்)

இந்தியா வெனுநம் முயிர்நிலைக் கனைய பேர்பெரு நாட்டினை யணைத்து
நந்தலி னியாபஸ் தலங்களை நாட்டி நாடெங்கும் ரயில்தபால் தந்தி
விந்தையாய்ச் சமைத்துப் பஞ்சப பாடை வேந்தர்கம பாஷையின் பயிற்சிக்
கந்தமில் சர்வ கலாசங்கங் களும்நன் கமைத்தார்சர்க் காரிவிந் தியர்க்கு. (55)

வேலைக ளளித்தும் வாணிப நாட்டில் விருத்தியாய்ப் பரவிடும் பொருட்டு
சாலைகள் கால்வா யெல்லையாய்ச் செய்தும் தமக்குமுன் மரீசண வொரேம்
பலவாங் குடிகளி நடன்கட்டை யேறு மெனுங்கொடு வழக்கங்கள் பலவும்
முலமோ டறுத்துப் பின்விதம் நன்று முயன்றர சியற்றிய யப்பால். (56)

(இரியப்பெருங்கலகமும், குவீன்விக்டோரியா ராஜ்யபாரத்தை வகித்ததும்)

நேர்ந்தவிந் தியமா கலகத்தி னிமித்தம் நிலைபிங்கி லாநதிமீனுர் கவனிப்
பார்த்திடு சிபி ஆயிரத் தெண்ணூற் றைம்பதிற் றெட்டெனு மாண்டில்
ஓர்ந்தநல் லறிவோ டுத்தம நுணர்ச்சி நலம்பிலமா தவஞ்செய்து தம்மைச்
சார்ந்திடு குவீன்விக் டோரியா வென்னும் சக்ரவாத் தினிக்கிந்த நாட்டினர். ()

(குவீன்ஸ் பிரகடனம்)

அரசினை யளிக்க அவருநல் மதவா ஞசாரமோ கனிற்பிர வேசம்
புரிகிற தில்லை யெனவுந்தா மரசு புரிவதிந் தியர்நன்மைக் கெனவும்
உரைசெறி னமது மகமவர் பழம்நன் குணர்வுநாஞ் செய்கைம்பா றெனவும்
முரசறை வித்த படிமற நீதி முறைவழா திருந்திடு நாட்டை. (58)

([illegible])

தப்பிரதி நிதிப் பல்பிர பு மற்றவர் தங்களைக் கொண்டர சாண்ட
பின்பதன் படிகவே முரலவே கட் வர்டும் பேரை சிபற்றிய பின்னர்
பொன்பொரு வியநன் மேரிபி னெடுமிப் பூமக டன்னையும் நீடு
மன்புகழ் மடந்தை தன்னைய மணந்த மன்னனைந் தாவது ஜியார்ஜாம் (59)

(ஐந்தாவது ஜியார்ஜ் சக்ரவர்த்தியும், அவர்செய்த நன்மைகளும்.)

மாலர சாட்சி வகித்துமே நிகரில் மதிப்ரதி நிதிப்ரபு ஹார்டிங்
சாலவே நன்கு மதித்துமே பின்பு சாற்றிய மொழிப்படி யுயர்வங்
காலையொன்றுய்ச்சேர்த்தாண்டிற்கைம்பதிலக்கங்கனதனங்கொடைக்கர்னன்
போலவிந் தியநாட் டினில்வித்தி யாபி விருத்தியின் பொருட்டீன் றுதவி. ()

இப்பெரு நாட்டி னாட்சியில் தக்க இந்தியர்க் குப்பெரும் பாசம்
இப்பொழு தருளி இனிமுழு தருள எழுந்தருள் இரவிபோன் றொளிரும்
அப்பிரபு ஆயுள் சந்ததி செல்வ மளவின்றி யோங்கிட வெனவே
எப்பொழு தினுந்தங் கடவுளை யேத்தி யிருப்பதிந் [illegible] (61)

இராகம்—புன்னாகவராளி - சாப்புத்தாளம்.

(இந்தியாவை தெய்வமாகக்கருதி நாம் வழிபடவேண்டுமெனல்)

திருவாழிந்தியாவெனும் நஞ்சுய - தேசப்பெருமையைப்பேசக்கேட்டீர்
குருவாய்மொழியாயின்னுஞ்சொல்வதைக்- கொண்டருள்வீர்நெறிநின்றருள்
உருகாநின்றபேரன்பினோடிந்த - உத்தமபாரதத்தைப்பற்றிநின்றே |வீர்
மருவார்மனமாமலராலதை - வந்தியுமேதினஞ் சிந்தியுமே. (62)

மனமோகனச்சாமளமாமணி - வண்ணன்றன் தேவியைக்கண்ணிணையைத்
தினமோதனம்பாலுடனேகெலிட் - டத்தெவிட்ட சதருமவனையினை
வனமோகனமா மயிலைக்கமை - மாதினையிந்தியாமேதினியைக்
கனமோடும்பன்மேன்மைகள்பொலிவீர - கைதொழுதே நிதமும் பணிமினே.()

கருமாமணியோடுயர்சேனையும் - தானையுமானையுகேநிதமும
திருமாவளநாடிந்தியாவெனும் - தேவியை ஆவியைப்போணுவீர்
பெருமாகனமுந்தனமுமிங்கு- பெருஞ்சுகமும் அங்குவருஞ்சுகமும்
வருமாசற்றுயோசித்துப்பாருங்கள் - மாந்தர்களேமதிவேந்தர்களே. (64)

வேறு

இராகம் சேகாரசேனாவம் சாப்புத்தாளம்.

(சுயதேசத்தைத் தாய்போலும், அதையாள்வோரைத் தந்தைபோலும் நாம் பாவிக்க வேண்டுமெனல்)

சுயதேசந்தாயாச்சே அதைத
துரைத்தனஞ்செய்வோர்தந்தையா ரல்லவோ
சுயதேசாபிமானத்தோடும் அதன்
துரைத்தனத் தாக்கன்பு செய்ய வேணும
பயவேபாசமதினிற் பாலும்
சுரக்கச் சுரக்கக்கறப்பது போல
நயமாயுமினத்தோடும நாளா
சறுதியில் நன்மைகள பெறு வோமே. (65)

பொறுகதோன் பூலோகமாள்வா னென்று
பொன்மொழிதனை உங்கள் நன் மதியில்
பொறுத்தே பகறதையும் பொறு பொழு
தொறுகனவிலென்ன விடிநு திடுமோ
ஒறுத்தே புழுவினுக்குக் குளவியுந் தன்
உருத்தரல் போனம்மைத் துரைத் தனத்தார்
ஒறுத்தாலதுவும் நமது நன்மைத்
தென்றுணரீர் குணத்தன்ற வரே (66)

வேறு.

(ஒவ்வொருவரும் தேசத்திற்குப் பாடுபடவேண்டுமெனல்)

எறும்பூரக் கலுங்தேயும் பிசகை
  எடுபோனும் தேயத்தாக்குழைக்க வேணும்
பெரும்பூக மெனவேதம தொரு
  போழ்வயிற்றினை மட்டும்பேண்வதில பன்
வருநாய் நரி கூடத்தம தொரு
  வயிற்றறை வளர்ப்பதினால் அதிலே
பெருமையென்ன காணும்போது விற்
  குழப்பதேசப் பணியென் றுணர் வீரோ. (67)

(இந்தியர் ஒற்றுமைபாராட்ட வேண்டுமெனல்)

தலையாயிருந்தா லென்ன அங்கம்
  தாளுங்காலாயி ருந்தாலு மென்ன
தொலையாய் வயிறுலென்ன அது
  தோளொரு கண்கையானாலு மென்ன
பலவாயிருந்தாலு மவ்வுறுப்பு நன்
  பண்பாகவே ஒன்றுசேர்ந் தடலாய்
இலைபா இவைதாமுந்தமக்குள் ளே
  பேதகம் எண்ணலும் பேதமையே. (68)

தாலுக்காளா யிருந்தாலென்ன கிருத்
  துவராகவே யிருந்தாலு மென்ன
தலைப்பார்ப்பன ராகிலென்ன நாம்
  தாழ்ப்பறை யருமாகி லென்ன
பலஜாதிகளா னாலுமே நாமும்
  பண்புடனொன்று சேர்ந்திந்திய ராய்
நிலைநான் பெறவிலையா பேதகம்
  நினைப்பதும்வீண் பேதமை தானே. (69)

(எல்லாஜனங்களும் கல்வியும் பலதொழில்களும் கற்கவேண்டுமெனல்.)

உப்புமுதல் கற்பூரம் வரைக் குமே
  உண்டாகும் நாடு நம்நாடல் லவோ
இப்பூமியைவிட்டயல்தேயத் துக்
  கேன்போய்க் குற்றேவல்கள் தான் செய் கிறீர்
மெய்ப்பாக நந்தமக்குக் கல்வி பயில்
  வித்து நந்தம்மைக் கைதூக்கி விட
இப்போது சர்க்காரர் கங்கணங் கட்டி.
  இருக்கிறார் பொருக்கெனவாருங் [illegible]

காற்றுள்ள போதே தூற்றிக்கொள் ளுங்கள்
கல்விகள் கற்றிடக் கால ரிதே
சாற்று நய்வாழ் நாள்கள் விரு
தாவிலே போனாற்பின் வாராது காண்
போற்றும் பல கைத்தொழில் வித்தை
புதுசு புதுசாகக்கற்றுக் கொண் டே
ஏற்றமடையுங்கள் அகற் றிது
வேறெழி வேறு வழியில்லை யே. (71)

(இந்திய நாட்டின் மகிமை.)

(கீர்த்தனம். இராகம்-தோடி-ஆதிதாளம்.)

பல்லவி.

நமதிந்தியா நாட்டினைப் போலவேறொரு
நாடிந்த மேதினிதனி லில்லையே

அநுபல்லவி.

இமயம் வடக்கில் குடக்கில் அரபிப் புணரி
இந்திரன் திசையில் வங்காளக் குடா உவரி
அமையுந் தெற்கினில் அழகான கன்யா குமரி
ஆகநான் கெல்லையுஞ் சேர்ந்தனை போரையு மாகரி (நமதிந்தியா)

சரணம்.

உலகதனிலே தனக்கிணையிலாமலே மிக
உயர்ந்த அணிவரையிமா சலமும் உல
கோங்கு நதிகளில்-மேடமகிமையுள்ள
உத்தமநதிகங்கையாதி பலவும் சோதி
அலர்கதிர்மதியுள்ளவரைக் குமிவ்வுலகினில
அழியாதிருக்குமக்ஷேத்திர நலமும சதா
அருமறையோதிமுத்தீவளர்த்துக்கலியை
அகற்றிடுமுயர் அந்தணா தலமும முனிர்
நிலைவரமாயுறையும் நீலகிரி முதலா
மலையும் தென்றலென்றும்வாழ்கின்றபொதியமலை
தலையில் முப்போகம்விளை - உயர்மருதம முதலை
நிலமும்தவமுனிவர் - நிறைதண்டக முதலா
நிரைத்தொகுதி யுறுதருவளம் நுகவள
நிலைத்த நெடுவனமொடுமடு நதிகுள
முறைத்தலருமிகு அழகொட திகவள
ஒளிப்ரபை கொளரண்மனைநகர் பலவொள எழில் (நமதிந்தியா)

வாழ்த்து.

இராகம்—அமீர்கல்யாணி - ஜம்பைதாளம்

வாழ்கஅந்தணரிறைவர் - வாழ்கஆனினங்களென்றும்
வாழ்கமாமறைஅருளும் - வானவரோடரனயன்மால்
வாழ்கஇந்தியஜனங்கள் - வாழ்கஇந்தியமதங்கள்
வாழ்கஇந்தியமறைகள் - வாழ்கஇந்தியநெறிகள்
வாழ்கஇந்தியநடைகள் - வாழ்கஇந்தியஉடைகள்
வாழ்கஇந்தியர்பாஷை - வாழ்கஇந்தியரொருமை
வாழ்கஆங்கிலமகிபர் - வாழ்கமங்கலஉலகம்
வாழ்கதஞ்சாதாஸன் - வளர்கசெந்தமிழே

